முருகப்பெருமான் துணை

**மகான் பெருமிழலை குறும்ப நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.03.2023**, புதன்கிழமை

1. தான தரும வழிகளை காட்டும்
   தவசியே ஆறுமுக அரங்கனே
   ஞானபலம் மக்களடைய வேண்டி
   ஞானிகள் பூசை செய்தருளுகின்ற
2. அருளுகின்ற அரங்கனின் பெருமைகூறி
   அறிவிப்பேன் அனுகூல ஆசி
   வரமென சுபகிருது சேல் திங்கள்
   வல்லமைபட அட்டம திகதி புந்திவாரம்
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் 08 ம் நாள், 22.03.2023, புதன்கிழமை)
3. வாரமதில் பெருமிழலை குறும்ப நாயனாரும்
   வழங்குவேன் உலகோர் நலம்பெற
   சோரமில்லா ஞானவான்கள்தனை
   சுத்தநெறி கொண்டு அரங்கன் படைக்க
4. படைக்க ஞானவழிகள் தேடி
   பாருலகில் அலையும் மக்கள்
   தடைகளின்றி பிரணவக் குடில் நாடி
   தவராஜனின் திருவடிகள் பற்றி
5. பற்றியே தீட்சைதனை ஏற்று
   பணிந்து அரங்கா எனத் தொடர்ந்து
   உற்றதொரு ஞானிகள் பூசையாக
   உயிர்கொலை நீக்கி அவரவரும்
6. அவரவரும் இல்லில் செய்துவர
   அனுதினமும் கடைப்பிடித்து
   அவதார ஞானி அரங்கன் துவக்கிய
   அன்னதான சேவையை ஏற்று
7. ஏற்றுமே மக்களை நோக்கி
   ஏழ்மை பசிபிணி விரட்டிட
   ஆற்றல்பட சேவை புரிய
   அன்னதான பலம்பெருகி
8. பெருகியே மக்களிடை மாற்றம்
   பேராசான் வழிகாட்டலுமாக
   தருமபலம் கூடி தன்னலம் கருதா
   தயவுமிக்க வாழ்வு முறையாக மாறும்
9. மாறியே ஆற்றல் கூடிட
   மனுதர்மம் காக்கும் சக்தியாக
   ஆறுமுகனார் வழிபாடு கூட்டி
   அனைவரும் ஞானியாகும் வண்ணம்

10. வண்ணமுடன் நிலைகள் தேறி
வையகம் காக்கும் சேவை
எண்ணம் நிறைந்த ஞானவான்கள்
எல்லாதிக்கும் நிறைந்த தலைமைகளாக

11. ஆகவே மாற்றம் கண்டு
அறிவிப்பேன் ஞான ஆட்சிமலரும்
வகையான ஞானசித்தர் காலம்
வையகம் கண்டு வளம்பெறும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–